பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 30 சித்திரை 4 ஜ: அகி: 8 இதழ் 65
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 17-4-78

லாலா சோப்
பிரகாச சலவை!
பளிச்சிடும் வெண்மை!
ஈழம் எங்கும் கிடைக்கும்
லாலா சோப் தொழிற்சாலை
அச்சுவேலி

### புதுவருடத்தில் 20 கொலைகள்!

[கொழும்பு]
புதுவருட தினத்தன்று நாடு முழுவதிலும் 20 கொலைகள் நடைபெற்றுள்ளதாக பொலிஸ் தலைமைக்காரியாலயம் அறிவித்துள்ளது.
குடிவெறி, சூதாட்டம் ஆகிய வற்றினால் எழுந்த சச்சரவுக விளைவே இதில் அநேக கொலைகள் இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ம-இ)

# பொலிஸ் படுகொலையை ஆராய முப்படைகள் உதவி!

## கடும் போராட்டம் நடந்ததாகக் கருத்து

(யாழ்ப்பாணம்)

**மன்னார் மடுறோட்டில் நடைபெற்ற துப்பறியும் பொலிஸ் கோஷ்டியினரின் கொலை தொடர்பாக விசாரணைசெய்துவரும் பொலிசாருக்கு உதவியாக கொலைஞர்களையும், இரகசியப்பொலிசாரின் காரையும் தேடும் பணியில் முப்படைகளும் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.**

கடற்படைவீரர்களும், இராணுவ வீரர்களும் பொலிசாருடன் இணைந்து காடுகளில் தேடுதல் நடத்தி வருகின்றனர். இதேவேளையில் விமானப்படையினர் விசேட விமானங்களில் தாழப்பறந்து தேடுதல் நடத்தி வருகின்றனர்.

கொலைசெய்யப்பட்ட துப்பறியும் பொலிசாரின் சடலங்களில் சூட்டுக்காயங்களுடன் வெட்டுக்காயங்களும் அடிகாயங்களும் இருப்பதைக் கருத்திற்கொண்டு சம்பவ தினம் சி. ஐ. டி. பொலிசாருக்கும் கொலைஞர்களுக்குமிடையே பலத்த கைகலப்பு இடம்பெற்றுள்ளதாக பொலிசார் நம்புகின்றனர்.

இக் கைகலப்பில் கொலைஞர் கோஷ்டியிலும் சிலர் கொலை செய்யப் பட்டிருக்கலாம் அல்லது காயமடைந்திருக்கலாம் என்றும் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

காயமடைந்த அல்லது கொலையுண்ட தமது சகாக்களை ஏற்றிச்செல்ல சி.ஐ.டி யினரின் காரை அவர்கள் பயன்படுத்தியிருக்கலாம் என்றும் பொலிசார் கருதுகின்றனர். [இ]

## தோட்டத் தொழிலாளரின் கூப்பன்களும் பறிமுதல்!

### நிவாரணமளிக்கக் கோரிக்கை

[வெள்ளவத்தை]
தோட்டத் தொழிலாளர்கள் ஏனைய தொழிலாளர்களைப் போல் வாழ்பவர்களல்ல மாதம் 300 ரூபாய் வருமான அடிப்படையில் தோட்டத் தொழிலாளரின் பங்கீட்டரிசிப் புத்தகங்கள் திருப்பப் பெறப்பட்டுள்ளன. இதனால் இவர்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இவர்களுக்கு நிவாரணம் கிடைக்க உடனடி நடவடிக்கைகளை உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சு மேற்கொள்ள வேண்டும்''

இவ்வாறு உணவுக்கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு. எஸ் பி ஹேரத்துக்கு இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் பொதுச்செயலாளர் திரு. எம் எஸ் செல்லசாமி அவசர கடிதமூலம் நடவடிக்கை எடுக்குமாறு கோரியுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்திருப்பதாவது:

(6ம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தொழிலாளரின் மேதின விழா

[யாழ்ப்பாணம்]
தமிழ்த் தொழிலாளரின் மேதினவிழா யாழ். மத்திய கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெறும். இவ்விழாவினையொட்டி பிரமாண்டமான ஊர்வலங்களும், தமிழர்களது கலாச்சாரத்தைப் பிரதிபலிக்கும் அலங்கார ஊர்திகள் பவனி, கலைநிகழ்ச்சிகளும் ஒழுங்குசெய்யப்பட்டு வருகின்றன. நாட்டுக்கூத்து, பரதநாட்டியம், நாதஸ்வரக் கச்சேரி ஆகியன கலைநிகழ்ச்சிகளின் போது சிறப்பு நிகழ்ச்சிகளாக இடம் பெறும்.

இவ்விழாவில் மொழிவழித் தொழிற்சங்கங்கள் இளைஞர் பேரவை, மாதர் பேரவை, தமிழர் விடுதலைக்கூட்டணி, மாணவர் அணி ஆகியவை பங்குபற்றுகின்றன.

இவ்விழாவிற்கான ஒழுங்குகளைக் கவனிக்க சட்டத்தரணி. மு ஆலாலசுந்தரம் தலைமையில் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

உபதலைவர்கள் திரு. த. நமசிவாயம், திரு. ஆர். விசுவநாதன். செயலாளர் திரு. ஐ தி. சம்பந்தன். இணைச்

(6ம் பக்கம் பார்க்க)

## 'மினி ரயில்' சேவை

(வெள்ளவத்தை)
கொழும்பு விஹாரமாதேவி பூங்காவில் சிறுவர்களுக்கான 'மினி ரயில்' சேவை இம்மாதம் 25ம் திகதி ஆரம்பித்து வைக்கப்படும்.

சிறுவர்களை ஏற்றிச்செல்லும் உல்லாச "மினி ரயில்" சேவையைப் போக்குவரத்து அமைச்சர் அஸ்ஹாஜ் எம். எச். முகமது தொடக்கிவைப்பார். பூங்காவைச்சுற்றி மினிரயில் சேவை நடத்தப்படும். இரு மினி புகையிரத நிலையங்களும் அமைக்கப்படும்.

பூங்காவைச்சுற்றி ரயில் பாதைபோடும் பணி மேற்கொள்ளப்படுகிறது. (இ)

## உப்பு ஏற்றும் சரக்குவண்டிப் பெட்டி உள்ளூரில் உற்பத்தி

[யாழ்ப்பாணம்]
உள்ளூரின் சேவையில் விடப்படும் உப்பேற்றும் சரக்கு வண்டிப் பெட்டிகள் இனி இலங்கையில் தயாரிக்கப்படும். இதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொண்ட ஆனையிறவு தோட்டை உப்புக்கூட்டுத்தாபன பொறியியல் பிரிவில் தற்போது புதிய உப்பு ஏற்றும் சரக்கு வண்டிப் பெட்டிகளைத் தயாரித்து வருகிறது.

இதன் மூலம் இலங்கைக்கு பல லட்சரூபா வெளிநாட்டு நாணயமாற்று மீதப்படுத்தப்படும். இங்கு தயாரிக்கப்படும் இச் சரக்கு வண்டிகள் அடுத்தமாதம் முதல் சேவைக்கு விடப்படும் என உயர் அதிகாரி யொருவர் எமது நிருபருக்குத் தெரிவித்தார்.

ஆனையிறவுத்தோட்டை உப்புக் கூட்டுத்தாபன பொறியியலாளர் பிரிவு மேற்பார்வையாளர் திரு. வி. எஸ். இராமலிங்கமே இப்பெட்டிகளை உள்ளூரில் தயாரிக்கும் முயற்சியில் முதன் முதலில் ஈடுபட்டு வெற்றியடைந்தார் என்பது குறிப்பிடத் தக்கது. [கே-இ]

## காலமானார்

(யாழ்ப்பாணம்)
பழம்பெரும் ஆங்கிலிக்கன் திருச்சபையின் வணக்கத்துக்குரிய ஜே. ஏ. ஆர். நவரத்தினம் நேற்று யாழ். ஆஸ்பத்திரியில் காலமானார்.

இறக்கும்போது அவருக்கு வயது 81. (இ)

## கணேசையர் நூற்றாண்டு விழா இன்று

(யாழ்ப்பாணம்)
வித்துவசிரோமணிபிரம்மஸ்ரீ சி. கணேசையர் நூற்றாண்டு விழா இன்றுமாலை புன்னாலைக்கட்டுவன் நலன்புரிச்சங்க ஆதரவில் ஆயர்கடவைச் சித்திவிநாயகர் ஆலய முன்றலில் சட்டத்தரணி திரு. பூ. இளையதம்பி தலைமையில் நடைபெறுகின்றது.

விழாவில் மங்கலவிளக்கை திரு. ச. இராசரத்தினம் ஏற்றிவைப்பர். வரவேற்புரையை திரு. அ. முதலித்தம்பியும் ஆசியுரையை நல்லை ஞானசம்பந்த ஆதீனகர்த்தா சுவாமிநாத பரமாசாரிய சுவாமிகளும் வழங்குவர்.

இறப்புரைகளை யாழ் வளாக தமிழ்த்துறைத் தலைவர் கலாநிதி ஆ. சண்முகதாஸ், பண்டிதர் இ. நமசிவாயகதேசிகர் யாழ் வளாக ஆங்கில விரிவுரையாளர் திரு. ச. விநாயகமூர்த்தி ஆகியோர் நிகழ்த்துவர்.

நூற்றாண்டுப் பேச்சுப் போட்டியில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு சுன்னாகம் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. தி. தாமோதரம்பிள்ளை பரிசுவழங்குவார்.

'அமிரின்' பிறந்ததின விழா

## எம். ஜி. ஆர்., கலைஞர், கவிஞரை அழைக்க முடிவு

[யாழ்ப்பாணம்]
எதிர்க்கட்சித் தலைவரும், காங்கேசன்துறை எம். பி. யுமான திரு ஏ. அமிர்தலிங்கத்தின் 50 வது வயது பூர்த்தியை மிகப்பெரும் விழாவாக தமிழக அரசியல் தலைவர்களையும் அறிஞர்களையும் அழைத்து கொண்டாடுவது என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் குப்பிழான் கிளை முடிவு செய்துள்ளது.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதப் பகுதியில் இவ்விழாவைக் கொண்டாடுவது என்றும் இவ்விழாவிக்கு தமிழ் நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் தமிழ்நாடு எதிர்க்கட்சியினதும் திராவிட முன்னேற்றக்கழகத்தினதும் தலைவருமான கலைஞர் டாக்டர் மு. கருணாநிதி தமிழ் நாடு அரச ஆஸ்தானக் கவிஞர் கண்ணதாஸன் உட்பட தமிழக அறிஞர்களையும் அழைப்பது என்றும் மேற்படி கிளை தீர்மானம் நிறைவேற்றியுள்ளது.

மேற்படி கிளையின் முதலாவது செயற்குழுக் கூட்டம் தலைவர் திரு. க. பொ நடனசிகாமணி தலைமையில் நடை

(6ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### தேவை

மேற்பார்வையாளர், லேத்மன் (Lathemen), கம்மாலை வேலை செய்பவர்கள், வெல்டர்கள் (Gas & Electric) தேவை அனுபவம் உள்ளவர்கள் மட்டும் நேரில் வரவும். ராதா மெசின் கொம்பனி, 95, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 9021

கண்ணாடித் தொழிற்சாலைக்கு வேலை பழகியவர்களும், வேலை பழகுபவர்களும் தேவை. நல்ல சம்பளம் கொடுக்கப்படும். நேரில் வரவும். சேவி கிளாஸ் அன் மெற்றல் வேக்ஸ், நீர்வேலி. 8994

### விற்பனைக்கு

CE 2984 லொறி V '8' சவளற் எஞ்சினுடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: பீ. பேரின்பம், 15, ஆனந்தன் வடலி வீதி, கொழும்புத்துறை 9049

1 ஸ்ரீ தொடரிலக்க BSA பான்டம் மோட்டார் சைக்கிள் விற்பனைக்குண்டு தபால் மூலம் அல்லது நேரில் தொடர்பு கொள்ளவும் சகுந்தலா ஏஜென்ஸி, அருளகம், கிளிநொச்சி. 9047

### கேள்வி விளம்பரம்

மானிப்பாய்க் கிராமசபை விசேட ஆணையாளரால் கீழ்க்காணும் றோட்டு வேலைகளுக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் 1978-04-28ம் திகதி காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்விப்பத்திரங்கள் ஒவ்வொன்றுக்கும் ரூபா 100/- கேள்விக் கட்டுப்பணமாகவும் பத்திரக் கிரயமாக ரூபா 10/-ம் செலுத்தி 1978-4-27 ம் திகதி நண்பகல் 12 மணிவரை பெற்றுக்கொள்ளலாம்.

மேலதிக விபரங்களை இச்சபைக் காரியாலயத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

வேலைகள்

1. சாவல்கட்டு றோட்டு திருத்த வேலை.
2. விவசாயவிதி திருத்த வேலை சண்டிருப்பாய்.
3. நாச்சிமார்கோவில் வீதி திருத்த வேலை நவாலி.
4. நாவலடி ஒழுங்கை திருத்த வேலை, ஆனைக்கோட்டை.

கே. கோபாலரத்தினம்
விசேட ஆணையாளர்,
மானிப்பாய்க் கிராம சபை,
ஆனைக்கோட்டை.
மானிப்பாய்க் கிராம சபை,
ஆனைக்கோட்டை,
1-04-78 9043

### பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

[இல 84 அ — பிரிவுகள் 524, 532]

யாழ்ப்பாணம், மாவட்ட நீதிமன்றத்தில்

காலஞ்சென்ற யாழ்ப்பாணம், இல. 55. விக்ரோறியா றோட்டு, அம்பலவாணர் சரவணமுத்து என்பவரின் மரணசாதனமில்லாச் சொத்தின் விடயத்தில்,

மரணமெய்தியவர் அம்பலவாணர் சரவணமுத்து கைம்பெண் இராஜராஜேஸ்வரி, இல 17 (55) விக்ரோறியா றோட்டு, யாழ்ப்பாணம். மனுதாரர்.

மரணசாதன நியாயாதிக்கம் இல த/3367.

1. சரவணமுத்து திரிபுரசுந்தரி, இல. 17 (55) விக்ரோறியா றோட்டு யாழ்ப்பாணம்
2. சரவணமுத்து பிரேமரஞ்சினி ஷை
3. கனகநாயகம் நல்லைநாதன் 375/7, நாவலர் றோட்டு, ஆனைப்பந்தி யாழ்ப்பாணம், இவர் ஷை 2ஆம் எதிர்வாதி மாகியபராயமற்றவரின் வழக்கு பாதுகாவலர்
—எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணச்சொத்தை நிருவகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு, அதில் அதற்கிணங்கப் பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ம் ஆண்டு வைகாசி மாதம் 5ஆம் நாளன்று முற்பகல் 10 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி, அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக் கட்டளை ஏன் முற்றுனதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணங்காட்டுமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றார்.

நீதிமன்றக் கட்டளைப்படி

(ஒப்பம்)
பொ. பாக்கியநாதன்
பதிவாளர்.

1978ம் ஆண்டு சித்திரை மாதம் 11ஆம்நாளாகிய இன்று தேதியிடப்பட்டது. 9023

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# காலயுக்தி வருடத்தில் உங்கள் பலன் எப்படி?

— சோதிடக் கலாநிதி க. வேலுப்பிள்ளை —

மேடம்: குடும்பசுகம், குறிக்கோள் வெற்றி. வாக்கு மேம்பாடு, வரவில் திருப்தி. நீண்டகாலத் தடை நீங்கி விவாகப் பொருத்தம் ஏற்படும். பிரிந்த காதலர்கள் ஒன்றுசேர்வர். விவசாயிகளுக்கு வெற்றியும், புதுத் தொழில் புரிவோருக்கு மதிப்பும், புதுமனை கட்டுவதில் விருப்பும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு உயர்வும், வணிகர்களுக்கும் வாகனச் சொந்தக்காரர்களுக்கு அதிக வரவும் உண்டாம்

இடபம்: தன்னயர்கள் மூலம் நம்பிக்கை மோசடி நேரும், குடும்பத்தில் குறுக்குவழி செல்வோரும் உண்டு. பொறுமை நன்று. கன்னிப்பெண்கள் கண்காணிப்புடன் நடந்து கொள்ளவேண்டும். விவசாயிகள் பருவகாலத்தைத் தவறவிடாது தொழில்செய்தால் நல்லபலன் அடைவர். பூமிப்பிணக்கு தலைதூக்கலாம், அமைதி காக்கவேண்டும். அரசியல்வாதிகளுக்கு இது ஒரு சோதனைகாலம். உத்தியோகத்தர்கள் கடமையில் நிதானம்வேண்டும். கைத்தொழில்புரிவோருக்கு மந்த நிலை.

மிதுனம்: புதுத்தொழில் புரிவோருக்கு ஏமாற்றம் உண்டு இன்னல்கள் பல பின்னிப் பின்னித் தோன்றும். நீர்த்தொழில்புரிவோர் நிதான புத்தியுடன் நடந்துகொள்ளவும், விவசாயிகள் ஆசிரியர்கள், அரசியல்வாதிகள், நிதானத்துடன் நடந்துகொள்ள வேண்டும். இவர்களுக்கு சோதனைகாலம். குடும்ப வாழ்க்கை கோணலாக இருக்கும். சுகக்குறைவுண்டு. காதலர்கள் பாதை கரடுமுரடாக மாறும். வாகனச்சாரதிகளுக்கு நிதானபுத்திவேண்டும். வணிகர்கள், கலைஞர்கள் மத்தியில் மந்தநிலை தோன்றும். பொதுவாக இக்காலம் எவர்க்கும் பொருள்மாற்றுக்கடாவாம்.

கடகம்: பிறர் பொருள் வரவு. செய்கருமம் வெற்றி. சென்ற இடம் சிறப்பு. தேகசுகம். பெரியோர் மத்தியில் மதிப்பு. வாகனச் சொந்தக்காரர்களுக்கு சமசுகம், பெரியோர் மத்தியில் மதிப்பு, அரசியல்வாதிகளுக்கு மதிப்பு. குருதொழில் புரிவோர்க்கு குதூகலம், கலைஞர்கள் போற்றப்படுவர். கைத்தொழில் புரிவோர்க்கு கணிசமான வரவுண்டு. கல்வி பயில்வோர்க்கு முன்னேற்றம் காணும், காதலர் வாழ்வில் மகிழ்ச்சியும் குடும்பஸ்தர்களுக்கு புத்திரகசுமும் உண்டாம். ஏழரை கழிவதால் குடும்பக்கவலை தீரும்

சிங்கம்: வணிகர்களுக்கு சமமான வருவாயும், வாகனச் சொந்தக்காரர்களுக்கு மந்த நிலையும், விவசாயிகளுக்கு வெற்றியும், ஆசிரியர்கள், அரசு ஊழியர்கள் மத்தியில் துன்பமும் இடமாற்றங்களும் உண்டாம். கன்னியர்கள் வாழ்வில் களங்கம் உண்டாக இடமுண்டு. பிறர் நம்பிக்கை, தனிவழிநடத்தல் தவிர்க்கப்படல் நன்று. கைத்தொழில் கடற்தொழில் புரிவோர்க்கு சமமான வருமானமுண்டு. குடும்பத்தில் மகிழ்ச்சிக்குறைவு தோன்றும். கல்வி பயில்வோர்க்கு மந்தநிலை.

கன்னி: வாகனசுகம், வரவில் திருப்தி, செய்தொழில் விருத்தி கருமங்கள் வெற்றி, விவசாயிகள் பிறர் நம்பிக்கைவைத்தல் கூடாவாம். தன்னம்பிக்கை தன வரவைக் கொடுக்கும், அரசியல்வாதிகளுக்கு ஆகாத காலம் நிதானபுத்தி நிம்மதியைத் தரும். அரசஊழியர் உயர்பதவிவேண்டின் உத்தம காலம். கல்விகலைகளில் பற்றுடையோர்க்கு சித்தியுண்டு, காதலர்வாழ்வில் களிப்பூட்டும் நிகழ்ச்சியுண்டு. குடும்பஸ்தர்களுக்கு குதூகலம் சேரும்.

துலாம்: குடும்பத்தில் குதூகலம். நீண்டநாள் தடைப்பட்டு நின்ற விவாகம் நடைபெறும். காதலர் வாழ்வில் களிப்பு மிகுதியும் விவசாயிகளுக்கு விருத்தியும் வணிகர்களுக்கு தனவரவும் வாகனச் சொந்தக்காரர்களுக்கு அமைதியும் கலைஞர்களுக்குப் புகழும் கிடைக்கவழியுண்டாகு. ஆசிரியர்கள் மதிக்கப்படுவர், அரச ஊழியர்கள் அதிக பலன் பெறுவர். அன்பளிப்புச் சேரும். பொன், வெள்ளி, தங்கம் போன்றவற்றில் தொழில் புரிவோர்க்கு எதிர்பாராத வரவும் மாணவர்கள் மத்தியில் சித்தியுமுண்டாம்

[5-ம் பக்கம் பார்க்க]

### தென்மராட்சிக் கலை மன்றம் சாவகச்சேரி
### அறிவித்தல்

14-4-78 பரிசில் சீட்டிழுப்பின் முடிவு பரிசிற்குரிய இலக்கங்கள் பின்வருமாறு:

| | |
|---|---|
| 1ம் பரிசு | 03282 |
| 2-ம் பரிசு | 02543 |
| 3-ம் பரிசு | 06544 |
| 4-ம் பரிசு | 03919 |
| 5-ம் பரிசு | 16357 |
| 6-ம் பரிசு | 04464 |
| 7-ம் பரிசு | 12334 |
| 8-ம் பரிசு | 09827 |
| 9-ம் பரிசு | 03451 |
| 10- பரிசு | 02308 |

இப்பரிசில்களை 23-4-78 ஞாயிறு பி. பகல் 5-6 மணிக்கிடையில் தென்மராட்சிக் கலைமன்ற முன்றலில் உரிமைகோருபவர் பெற்றுக் கொள்ள ஒழுங்கு செய்யப்படும். அன்று சமுகந்தரமுடியாதவர்கள் முன்கூடி அறியத் தந்து 30-4-78க்கு முன் பெருதுவிடின் மன்றம் ஏலவிற்பனை செய்யும்.

க. இராசரத்தினம்,
9050 பொதுச்செயலாளர்

[வித்துவசிரோமணி சி. கணேசையர் அவர்களது நூற்றாண்டுவிழா அன்னாரது பிறந்த இடமாகிய புன்னாலைக்கட்டுவனில் இன்று கொண்டாடப்படுகிறது.

# தமிழுலகின் மதிப்பார்ந்த அறிஞன்

— திருமதி ஞானலட்சுமி ஞானசேகரஐயர் —

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த புன்னாலைக்கட்டுவன் என்னும் கிராமத்தில் எழுந்தருளியிருக்கும் ஆயாகடவைச் சித்தி விநாயகர் பெருமானுக்கு பரம்பரையாகத் தொண்டு செய்து வாழும் அந்தணர் குலத்தில் பிரம்மஸ்ரீ சின்னையருக்கும் சின்னம்மாளுக்கும் கணேசையர் 26-03-1878ல் மகனைப் பிறந்தார். விநாயகப்பெருமானின் திருவருளினால் கிடைத்த குழந்தைக்கு தாய்தந்தையர் கணேசையர் என்னும் நாமம் சூட்டினர்.

சிறுவயதிலே தெய்வபக்தியும் தமிழ் ஆர்வமும் கொண்டிருந்த கணேசையர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களின் மாணாக்கர்களில் ஒருவராகிய வித்துவசிரோமணி பொன்னம்பலபிள்ளையிடமும் பின்னர் சுன்னாகம் குமாரசாமிப் புலவரிடமும் தமிழை ஐயந்திரிபறக் கற்றார்கள்

தமது இருபத்தோராவது வயதில் ஆசிரியராக நியமனம் பெற்ற ஐயரவர்கள் அன்னலெட்சுமி என்னும் அம்மையாரைத் திருமணம் புரிந்து நயினாதீவில் ஏழாண்டுகாலம் வாழ்ந்தார்கள், அக்காலத்திலே அவர் பல நூல்களை ஆராய்ந்து அறிவைப் பெருக்கினார்கள். 1921ம் ஆண்டில் சுன்னாகம் பிராசீன பாடசாலையின் தலைமைப்பேராசிரியராகி பதினொரு ஆண்டுகள் தமிழ்த்தொண்டு புரிந்தார்கள். இக்காலகட்டத்திலேதான் யாழ்ப்பாணத்திலே பல பண்டிதர்கள் இவரால் உருவாக்கப்பட்டார்கள்.

பிராசீனப்பாடசாலையை விட்டு நீங்கிய பின்னர் வித்துவசிரோமணி அவர்கள் நூல்கள் எழுதுவதிலும் தெய்வவழிபாட்டிலும் காலத்தைக் கடத்தினார்கள்.

மதுரைத் தமிழ்ச்சங்க வெளியீடாகிய 'செந்தமிழ்' என்னும் ஏட்டிலே எழுதிய இலக்கண இலக்கிய ஆராய்ச்சிக் கட்டுரைகள் ஐயர் அவர்களுக்குப் பெரும் புகழை ஏற்படுத்தியது. அதனால் அவர் தமிழ் கற்றோரால் பெரிதும் மதிக்கப்பட்டார்.

ஐயரவர்களது தமிழ்மொழி அறிவின் பெருக்கத்தை அறிந்த தமிழ் அறிஞர்கள் அன்னாருக்கு 'மகாவித்துவான்' பட்டம் வழங்கினர். ஆரியதிராவிட பாஷா விருத்திச்சங்கம் அவருக்கு வித்துவசிரோமணி

(5-ம் பக்கம் பார்க்க)

# L. P காஸ் காட்டும் வழி

★ சுகாதாரத்திற்கு ★ நேரத்தை மிச்சப்படுத்துவதற்கு ★ பணத்தை சேமிப்பதற்கு ★ பாத்திரத்தில் கரி பிடிக்காமல் எந்நேரமும் சுத்தமாக வைத்திருப்பதற்கு ★ உணவின் ருசி கெடாமல் இருப்பதற்கு ★ வீட்டு வேலைக்கு ஆள் இல்லை என்ற குறையைப் போக்குவதற்கு ★ சமையல் அறையை எந்நேரமும் சுத்தமாக வைத்திருப்பதற்கு இன்றே பாவிக்கத் தொடங்குங்கள். **L. P. காஸ்**

விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்:

எஸ். பி. சாமி அன் கோ.
193, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி; 7025

தலைமைக் காரியாலயம்,
72, 4 ம் குறுக்குத் தெரு,
கொழும்பு-11.
போன்: 22640

ஈழநாடு
The Eelanaadu

## தொல்பொருள் ஆராய்ச்சி

இலங்கையில் நடைபெறும் புதைபொருள் ஆராய்ச்சிகளின்போது தமிழர் சின்னங்கள் தென்பட்டால் அங்கு உடனடியாக ஆராய்ச்சி நிறுத்தப்படுகிறதென்றும் அந்த ஆராய்ச்சியாளர்கள் உடனடியாக இடமாற்றம் செய்யப்படுகிறார்கள் என்றும் எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் ஒரு கூட்டத்தில் பேசுகையில் கூறியிருக்கிறார்.

எதிர்க்கட்சித் தலைவரின் இந்தத் தகவல் இன்றைய அரசாங்கத்தின் கண்களைத் திறக்க உதவவேண்டும்.

நாட்டில் எந்த இடத்தில் ஆராய்ச்சி செய்தாலும் அதில் தமிழரின் சின்னங்கள் கிடைத்தால் அவை இருட்டடிப்புச் செய்துவிடுவது பற்றிப் பலரும் பல தடவைகளிலும் எடுத்துக் கூறி வந்திருக்கின்றனர்.

இது தவிர தமிழ்ப்பகுதிகளில் குறிப்பாக யாழ்ப்பாணத்தில் இன்னமும் ஓரளவாவது மக்களால் பாதுகாக்கப்பட்டுவரும் சங்கிலியன் கோட்டை பற்றியும் சங்கிலிய மன்னன் வாழ்ந்த இடம்பற்றியும் தொல்பொருள் ஆராய்ச்சி நடத்தவேண்டுமென்று பல வருடங்களாகக் குரல் எழுப்பப்பட்டு வந்துள்ளது.

திருக்கோணேஸ்வரம், திருக்கேதீச்சரம் பற்றியும் இன்னும் ஆராய்ச்சி நடத்தவேண்டுமென்றும் பலரும் கோரிவந்துள்ளனர்.

இவை யாவும் செவிடன் காதில் ஊதிய சங்காகவே இதுவரை இருந்துவருகிறது.

ஆனால் கந்தரோடையிலும் கந்தளாயிலும் ஆராய்ச்சிகள் இன்னமும் தொடர்ந்து நடந்துகொண்டிருக்கின்றன.

தொல்பொருள் ஆராய்ச்சி ஒரு நோக்கத்தையே கொண்டு நடைபெறுவது கூடாது. அது உண்மையை உள்ளவாறு எடுத்துக்காட்டுவதாக இருக்கவேண்டும்.

ஹரப்பா, மொகஞ்ஜதாரோ இடங்களில் நடைபெற்ற தொல்பொருள் ஆராய்ச்சி, உள்ளதை உள்ளவாறு கண்டறியும் நோக்கத்தில் நடைபெற்றதால் திராவிட நாகரிகம் பற்றிய உண்மை வெளிவந்தது.

இதைத் தொடர்ந்து ரஷ்யர்கள் அதை ஆராய்ந்து திராவிட நாகரிகம்தான் உலகத்திலேயே தொன்மையானதென்பதைக் கம்பியூட்டர் மூலமே கண்டு அறிவித்தனர்.

இலங்கையில் எண்ணை வளம் பற்றியும் மற்றும் தொழில் வளம் பற்றியும் ஆராய்ச்சி செய்வதற்காக வெளிநாடுகளிலிருந்து நிபுணர்களையும் ஆராய்ச்சியாளர்களையும் தருவிக்கின்றோம்.

இலங்கையின் பழமைகளை, கலாச்சார வரலாறுகளை உண்மையாக அறிந்துகொள்வதற்காக ஏன் வெளிநாடுகளிலிருந்து தொல்பொருள் ஆராய்ச்சியாளர்களையும் நிபுணர்களையும் இங்கு அழைக்கக் கூடாது.

வெளிநாட்டு ஆராய்ச்சியாளர்களும் நிபுணர்களும் வந்து தொல்பொருள் ஆராய்ச்சி நடத்தினால் இங்கு வீண் சர்ச்சைக்கும் பிரச்சினைக்கும் இடமிருக்காது என்று நம்பலாம்.

### பொலிஸ், ராணுவ, நிர்வாக உயர் பதவிகளுக்கு

# சிங்களவரை நியமிப்பதே அரசின் கொள்கையாக விருக்கிறது

## தமிழர்இருந்தும் புறக்கணிக்கப்படுகிறார்கள்

### சன்சோனிக்கமிஷன்முன் டாக்டர் பாலசிங்கம் தொடர்ந்து அளித்தசாட்சியம்

[யாழ்ப்பாணம்]

பொலிஸ், இராணுவ சேவைகளிலும், நிர்வாக உயர்பதவிகளிலும் சிங்களவர்களையே நியமிப்பதென்பது அரசின் கொள்கையாக இருந்துவருகின்றது. வடக்கு, கிழக்கில் தமிழ் உத்தியோகத்தர்கள் இருந்தும் அவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள். சிங்களப்பகுதிகளுக்கு சிங்கள உத்தியோகத்தர்களையும் தமிழ்ப் பகுதிகளுக்கு தமிழ் உத்தியோகத்தர்களையும் நியமிப்பது நல்லது.

பாதிக்கப்பட்ட தமிழ் ஊழியர் சங்கத் தலைவர் டாக்டர் பாலசிங்கம் சன்சோனிக் கமிஷன் முன் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் இவ்வாறு கூறினார். அவரது சாட்சியத்தின் ஒருபகுதி ஏற்கனவே வெளிவந்துள்ளது.

டாக்டர் பாலசிங்கம்மேலும் கூறியதாவது:

எமது சங்கத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பிரதமருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. இதன் பதிலை எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். ஆனால் கடிதம் கிடைத்தது என மட்டும் அறிவிக்கப்பட்டிருந்தது. எங்கள் சங்க உறுப்பினர்கள் தங்கள் வேலைத்தலங்களுக்கு திரும்பமுடியாமல் இருந்தது. ஆதலால் செப்டம்பர் 12ந் தேதி வேலைக்குத் திரும்புமாறு அரசு விடுத்த கோரிக்கையை நிராகரித்தோம்.

அரசு செப்டம்பர் 19ந் தேதி வேலைக்கு திரும்புமாறு மீண்டும் கோரிக்கையை விடுத்தது. செப்டம்பர் 12ந் தேதி என்ன காரணத்திற்காக வேலைக்குத் திரும்பாமல் இருந்தோமோ அதேகாரணத்திற்காக செப்டம்பர் 19ந் தேதியும் திரும்பவில்லை.

வேலைக்குத் திரும்புமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்றுக்கொள்வதில்லை என்று செப்டம்பர் 15ந் தேதி நாம் ஒரு அறிக்கையை வெளியிட்டோம். செப்டம்பர் 17ந் தேதி எமதுசங்கத்தில் பொதுக் கூட்டமொன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் செப்டம்பர் 19ந் தேதி வேலைக்குத் திரும்புவதில்லையென முடிவு செய்யப்பட்டது.

#### அமிரிடம் கேட்டோம்

அரசிடமிருந்து நேரடியாக குறைந்தளவிலாவது உதவி கிடைக்காத காரணத்தினால் அரசியல் உதவியை நாட வேண்டியிருந்தது. எங்கள் சார்பில் இவ்விஷயத்தில் தலையிடுமாறு எதிர்க்கட்சித் தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கத்திடம் செப்டம்பர் 20ந் தேதி கேட்டோம்.

வடக்கு கிழக்கில் பதவி வகித்த சிங்கள ஊழியர்களுக்கு அவர்கள் விரும்பிய இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்பட்டதுபோல் தமிழ் ஊழியர்களுக்கும் அவர்கள் விரும்பிய இடங்களுக்கு இடமாற்றம் வழங்கப்படவேண்டுமென எதிர்க்கட்சித் தலைவரிடம் கேட்டுக்கொண்டோம். அலவன்ஸ், முற்பணம் மற்றும் நிதிஉதவிகளும் வழங்கப்படவேண்டும் எனக் கோரினோம்.

#### பிரதமரை அமிர் சந்தித்தார்

எதிர்க்கட்சித் தலைவர் செப்டம்பர் 22ந் தேதி பிரதமரைச் சந்தித்தார். இதன்காரணமாக அரசு சில இடங்களை பாதிக்கப்பட்ட பகுதிகளாகப் பிரகடனம் செய்தது இப்பகுதிகளில் கடமையாற்றிய ஊழியர்களுக்கு இடமாற்றம் வழங்குவதாக உறுதியளிக்கப்பட்டது.

செப்டம்பர் 26ந் தேதி நடந்தகூட்டத்தில் சங்கஉறுப்பினர்கள் இடமாற்ற விண்ணப்பங்களைத் தனித்தனியே, பிரதிகளுடன், சங்கத்திற்கு 30ம் தேதிக்குமுன் அனுப்பிவைக்குமாறு தெரிவிக்கப்பட்டது. இதன்பின் உறுப்பினர்கள் இடமாற்ற கட்டளையை எதிர்பார்த்துக்கொண்டிருந்தனர். எமது சங்கம் இந்த விண்ணப்பங்களைப் பரிசீலனை செய்து, சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்கு அனுப்பிவைத்தது. ஆனால் எந்த இலாகாவிடமிருந்தும், கடிதம் கிடைத்தது என்றுகூட பதில் கிடைக்கவில்லை. ஆகஸ்டில் 50 வீத சம்பள முற்பணத்தை தவிர, உறுப்பினர்களுக்கு எந்த சலுகையும் கிடைக்கவில்லை. பதவி இழப்பு', நோ பே' என்ற பயமுறுத்தல் கிடைத்தது. இது பிரதமரின் உறுதிமொழிக்கு மாறாக இருந்தது.

#### தொடர்ந்து முயற்சி

எமது சங்கம் தொடர்ந்து பிரதமருடன் தொடர்பு கொண்டிருந்தது. எதிர்க்கட்சித் தலைவருடனும் தொடர்பு கொண்டிருந்தது, இலாகா தலைமைப்பீடங்களுடனும் தொடர்புகொண்டிருந்தது. இதனால் சிலரின் விஷயங்களில் மட்டும் பிரச்சினை தீர்ந்தது.

தபால், வருமானவரி இலாகாமட்டும் தற்காலிக இடமாற்றங்கள் செய்ய சம்மதித்தது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இத்தலைமைப்பீடங்களுக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

#### தூர இடங்களுக்கு இடமாற்றம்

சுகாதார இலாகாவில் எதுவுமே நடக்கவில்லை. அனுராதபுரத்தில் கடமையாற்றிய டாக்டர்களுக்குமட்டுமே இடமாற்றம் கிடைத்தது. அதுவும்தெற்குப்பகுதியில் மிக தூரமானபகுதிகளுக்கு இடமாற்றம் கிடைத்தது.

இப்பிரச்சினைகள் தொடர்பாக, நான் எதிர்க்கட்சித் தலைவருடனும், யாழ்ப்பாண எம். பியுடனும், நவம்பர் 7ம் தேதி சுகாதார அமைச்சரைச் சந்தித்தேன். இம்மாநாட்டிற்குப் பின்னர்கூட சில உறுப்பினர்கள் மாதக்கணக்காக எவ்வித கட்டளையும் கிடைக்காமல் காத்திருந்தனர்.

சுகாதார இலாகாவிலிருந்து, கடிதங்களுக்கும், தந்திகளுக்கும் எவ்வித பதிலுமே கிடைக்கவில்லை.

சம்பவம் நடந்த இறுதிக் காலத்திற்குள், எங்கள் உறுப்பினர்கள் பாதிக்கப்பட்டிருந்த நிலையில், கமிஷன் நியமிக்கப்படும் என்ற நம்பிக்கையிருந்தது. அப்படி நடந்திருந்தால், தாக்கப்பட்டவர்களுக்கு வெகு தூரத்திலிருக்கும் உறுப்பினர்கள், சம்பவங்கள்பற்றி விபரமாகக்கூற வாய்ப்பு ஏற்பட்டிருக்கும். இதனால்தான் பாதிக்கப்பட்ட ஊழியர், கமிஷன் விசாரணை முடிந்து, சம்பந்தப்பட்டவர்களுக்கு தண்டனை வழங்கும்வரை, வடக்கு கிழக்கில் இருக்க வேண்டுமென விரும்பினோம். எங்கள் சங்க உறுப்பினர்களில் பெரும்பாலானவர்கள் 'நோ பே' வேலை இழப்பு' என்ற பயமுறுத்தல் மத்தியில், வேலைக்குத் திரும்ப வேண்டிய துர திர்ஷ்டநிலை ஏற்பட்டது. அரசு இக்கமிஷனை நியமிக்க முன்னரே இந்நிலை ஏற்பட்டது.

#### சிலருக்கு சாட்சிஅளிக்க முடியாதநிலை

பாதுகாக்கப்பட்டவர்களில்,' எமது சங்கத்தைச் சேர்ந்த பெரும்பாலான உறுப்பினர்கள் திரும்பவும் தங்கள் வேலைத் தலங்களுக்கு கொள்ளையர்களுக்கும் குண்டர்களுக்கும் மத்தியில் சேவைசெய்ய சென்ற காரணத்தினால் இக்கமிஷன் முன் வந்து சாட்சியமளிக்க முடியாத நிலையில் இருக்கிறார்கள் என்பதை தெரிவிக்கின்றேன். சம்பவங்கள் பற்றி உண்மை விபரத்தை அறிவதற்கு, அவர்கள் இங்கு வந்து சாட்சியமளிக்க முடியாத நிலையில் உள்ளார்கள் என்பது தெளிவான விஷடமாகும். சில அரசாங்க ஊழியர்கள் பாதுகாப்பான இடங்களில் கடமையாற்றி வருகிறார்கள் என்பதையும் கூற விரும்புகிறேன்.

#### உணர்ந்த உண்மை

1956-ம் ஆண்டு முதல் அடிக்கடி நடந்துவரும் கலவரத்தினால், தமிழர்கள் வடக்கு கிழக்கிலுள்ள பாரம்பரிய தாய் நாட்டில்தான் பாதுகாப்பாக வாழமுடியும் என்பதை உணர்ந்துள்ளனர்.

#### உயர் பதவிகள்

பொலிஸ், இராணுவ சேவைக்கும், நிர்வாகத்தில் உயர் பதவிகளுக்கும் சிங்களவர்களையே நியமிப்பதென்பது அரசின் கொள்கையாக இருக்கிறது. வடக்கு கிழக்கில் தமிழ் உத்தியோகஸ்தர்கள் இருந்தும் கூட அவர்கள் புறக்கணிக்கப்படுகின்றனர். சிங்கள பகுதிகளுக்கு சிங்கள உத்தியோகஸ்தர்களும் தமிழ்ப்பகுதிகளுக்கு தமிழ் உத்தியோகஸ்தர்களும் நியமிப்பது நல்லது. தமிழ் ஊழியர்கள் வேலைஸ்தலங்களில் பயமின்றி வாழவும் தங்கள் பிள்ளைகளின் கல்வி கலாச்சாரம், சமயத்தை வளர்க்கவும் இது உதவியாக இருக்கும்.

ஆதலால் தமிழ் உத்தியோகத்தர்களுக்கு வடக்குக் கிழக்கில் இடம்பெற்றுக் கொடுக்க அரசுக்கு கமிஷன் சிபாரிசு செய்ய வேண்டுமென்பதை வலியுறுத்திக் கூறுகிறேன்.

நிர்வாகக் கஷ்டம் இல்லாமல் இத்திட்டத்தை நிறைவேற்றலாம் என்பது எமது அபிப்பிராயமாகும் ஒவ்வொரு இலாகாவையும், பரவலாக்குவதன்மூலம் இதனை செய்யலாம். இது அரசாங்கத்தின் கொள்கையாகும் கிராமாரீதியில் நிர்வாகத்தைப் பரவலாக்குவது இதற்கு வழிவகுக்கும். இது மக்களுக்கும் அரசுக்கும் தமிழ் ஊழியர்களுக்தும் கைகொடுத்து உதவு.

தமிழ் அரசாங்க ஊழியர்கள் மீண்டும் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு செல்வது தவிர்க்கப்பட வேண்டும்.

#### அரசின் பொறுப்பு

சிங்களப்பகுதிகளுக்கு வேலைக்கு சென்றுள்ள தமிழ் ஊழியர்கள் தங்கள் விருப்பப்படி செல்லவில்லை அரசின் கோரிக்கைப்படியே சென்றுள்ளனர். ஆதலால் அவர்களையும் அவர்கள் உடைமைகளையும் பாதுகாப்பது அரசின் பொறுப்பு அரசு இதை செய்யத்தவறினால் பெரும் விளைவுகள் ஏற்படும்.

சேவையில் தொடர்ந்து இருக்கவிரும்பாத ஊழியர்களுக்கு முழு நிவாரணத்துடன் இளைப்பாற அனுமதிக்க வேண்டும் இதுதொடர்பாக முறையான ஒருசட்டத்தை அரசுக்கு சிபாரிசு செய்யுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

#### நஷ்டஈட்டு பிரச்னை

உடைமைகளை இழந்தவர்களுக்கான நஷ்டஈடு பற்றிய பிரச்சினையும் இருக்கிறது. சொத்துக்கள் முழுவதையும் இழந்த அரச ஊழியர்களுக்கு முழு நிவாரணம் வழங்கப்படவேண்டும். உயிர்களைப்பறி கொடுத்தவர்களின் குடும்பத்தவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படவேண்டும் கணவனை இழந்தவர்கள், முழுப்பென்சனையும்பெற ஒழுங்கு செய்யப்படவேண்டும். இவ்விஷயங்கள் உடனடியாக கவனிக்கப்படவேண்டும். இந்நிவாரணம் பற்றி இறுதியான திட்டம் தயாரிக்கப்படுவதற்குமுன் உடனடியாக ஒருபகுதி நிவாரணம் வழங்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும்.

#### சிங்களவர் முயற்சி

சிங்கள பகுதிகளில் பல தமிழ் ஊழியர்களுக்கு அசைவற்ற ஆதனங்கள் உண்டு. இதனால் அவர்களுக்கு பயன் ஏதும் ஏற்படப்போவதில்லை, சிங்களவர்கள் இப்போ இந்த ஆதனங்களை வாங்கும் முயற்சியிலிருக்கின்றனர். இந்த ஆதனங்களை அரசு வாங்கி பின்னர் சிங்களவர்களுக்கு விற்க கமிஷன் சிபாரிசு செய்ய வேண்டும். தமிழ் ஊழியர்கள் சிங்களப்பகுதிகளில் உள்ள தங்கள் ஆதனங்களுக்கு நியாயமான விலை பெறக்கூடிய ஒரே ஒரு வழி இதுவாகும்.

தமிழ்ச்சமூகத்தைப் பாதிக்கும் எந்தப்பிரச்சினையும் தமிழ் ஊழியர்களையும் பாதிக்கும் என்பதைக் கூறவிரும்புகின்றேன்.

ஆகஸ்ட், செப்டம்பர் கலவரத்தில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பங்குபற்றியவர்களுக்கு தண்டனை வழங்கப்படவேண்டும். சகல தமிழ்

[4-ம் பக்கம் பார்க்க]

#### மணிவாக்கு

எடுத்தகற் கெல்லாம் அஞ்சியஞ்சிப் பின் நிற்பவர்கள் வாழ்வில் முன்னேற முடியாது.

— சுபாஸ்சந்திரபோஸ்

## மாஜி இத்தாலியப் பிரதமருக்கு

# மரண தண்டனை

## கடத்திச் சென்ற கெரிலாக்கள் அறிவிப்பு

ரோம், ஏப். 16

மாஜி இத்தாலியப் பிரதமமந்திரி அல்டோ மொரோவுக்கு இத்தாலிய செம்படை கெரில்லாக்கள் மரணதண்டனை விதித்துள்ளனர்.

தமது இத் தீர்ப்பு பற்றி அவர்கள் பல வெகுஜன சாதனங்கள் மூலம் அறிவித்தனர்.

30 வருடகாலமாக ஆட்சி நடத்திவரும் கிறிஸ்தவ ஜன நாயக கட்சிக்கும் செம்படை கெரில்லாக்கள் கண்டனம் தெரிவித்துள்ளனர், அல்டோ மோரோ மீதான குற்றச் சாட்டுகள் நிரூபிக்கப்பட்டுள்ளன. அவர் குற்றவாளி என்று செம்படை கொரில்லாக்கள் தெரிவித்துள்ளனர்.

ஆனால் இவர் மீதான மரண தண்டனை எப்போது நிறை வேற்றப்படும் என்று அறிவிக்கப்படவில்லை.

இத் தீர்ப்பு அறிவிப்புபற்றி இத்தாலிய உள்துறை அமைச்சு ரோமாபுரி பொலிசுடன் ஆலோசனை நடத்துகிறது.

கடந்த மாதம் செம்படை கெரில்லாக்கள் துப்பாக்கி முனையில் மாஜி இத்தாலியப் பிரதமரைக் கடத்திச்சென்றதும் அவ்வேளை அவரது மெய்ப் பாதுகாப்பாளர்கள் சுட்டுக்கொல்லப்பட்டதும் மக்கள் நீதிமன்றம் முன் அல்டோமோரோ விசாரணை செய்யப்படுவார் என அறிவிக்கப்பட்டதும் தெரிந்ததே. (ஃ)

## ஹரிஜனர் நலன்பேண

# ரூ. 40 கோடி ஒதுக்கீடு

### பாரத அமைச்சர் அறிவிப்பு

சென்னை, ஏப். 16

ஹரிஜனரின் நல்வாழ்வுத் திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக மத்திய அரசு 40 கோடி ரூபாவை ஒதுக்கியுள்ளது.

இத் தகவலை பாரத மத்திய போக்குவரத்து அமைச்சர் திரு. சந்திரா சென்னையில் அறிவித்தார்.

சென்னையில் நடைபெற்ற மத்திய அமைச்சர் திரு. ஜெகஜீவன்ராமின் பிறந்ததின விழாவில் அவர் மேலும் பேசுகையில் ஹரிஜனர்களின் மேம்பாட்டிற்காக மத்தியஅரசு தன்னாலியன்ற சகலவற்றையும் செய்யும் என்று உறுதியளித்தார். (உ)

## சிங்கப்பூர் பிரதமர் இலங்கை விஜயம்

(கொழும்பு)

சிங்கப்பூர் பிரதமர் லீ-குவான் யூ உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றினை மேற்கொண்டு இலங்கை வந்துள்ளார்.

பாரியாரும் அவருடன் சிங்கப்பூர் வெளிநாட்டமைச்சர் திரு. ராஜரத்தினமும் மற்றும் சில அமைச்சர்களும் வந்துள்ளனர்.

ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் விருந்தினராக சிங்கப்பூர் பிரதமர் புதன்கிழமை வரை இலங்கையில் தங்கியிருப்பார்.

இருதலைவர்களும் பரஸ்பரப்பட்ட விடயங்கள் குறித்து பேச்சு வார்த்தைகள் நடத்துவர்.

நேற்றிரவு கட்டுநாயகா விமானநிலையத்தை வந்தடைந்த சிங்கப்பூர் பிரதமரையும் குழுவினரையும் பிரதமர் திரு. பிரேமதாஸ அமைச்சர்கள் காமினிதிசநாக்கா ஹமீத் உட்பட பலர் வரவேற்றனர். (உ)

......

## குருபூஜை

[யாழ்ப்பாணம்]

யாழ் திவ்ய ஜீவன சங்கத்தின் ஆதரவில் இன்று மாலை 5 மணியிலிருந்து 7 மணிவரை சங்க மண்டபத்தில் ராமநவமி கொண்டாடப்படுகிறது.

திருகோணமலை தவபோதனத்தில் இவபதமடைந்த ஸ்ரீசுவாமி சிதானந்த சச்சிதானந்தசரஸ்வதி மாதாஜியின் குருபூசையும் நடைபெறும்.

இந் நிகழ்ச்சியில் திருமதி புஷ்பா செல்வநாயகமும், திருமதி நவரத்தினமும் உரையாற்றுவர். [உ]

## பதிவுசெய்யக் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

குருநகர் சென். திரேசாள் பீடித்தொழிலாளர் சங்கம் தமது சங்கத்தைப் பதிவு செய்து தருமாறு யாழ். எம். பி. திரு. வி. யோகேஸ்வரனையும் யாழ். கூட்டுறவு உதவி ஆணையாளரையும் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்றினைத் தனது மாதாந்தக் கூட்டத்தில் நிறைவேற்றியுள்ளது.

இந்தக்கூட்டம் செல்வி டேவிட் எமெல்டா தலைமையில் நடைபெற்றது.

தமது சங்கம் பதிவு செய்யப்பட்டாலே பீடிஇலை பெர்மிட்டைப் பெறுவதற்கு இலகுவாக இருக்கும் ஆகையினால் இவ் விடயத்தில் துரித நடவடிக்கை எடுக்குமாறு எம். பியையும் உதவி ஆணையாளரையும் இத்தீர்மானம் கோருகிறது.

கூட்டுறவு இலாகா இன்ஸ்பெக்டர் திரு ச. ஆ. மகேஸ்வரன் கூட்டத்தில் கலந்துகொண்டு பேசுகையில் இச்சங்கம் எத்தகைய உதவியும்

[6-ம்பக்கம் பார்க்க]

## சிங்கள...

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

ஊழியர்களையும் தமிழ்பேசும் பகுதிகளுக்கு மாற்றவேண்டும்.

உயிர்களை இழந்த குடும்பத்தினருக்கும் சொத்துக்களை பறிகொடுத்தவர்களுக்கும் முழு நிவாரணம் வழங்கப்பட வேண்டும்.

தொடர்ந்து வேலைசெய்ய விரும்பாத ஊழியர்கள் இளைப்பாற ஒரு திட்டத்தை சிபார்சு செய்யவேண்டும்.

தமிழ் ஊழியர்களை அங்கமாகக்கொண்ட தமிழ்ச்சமூகத்தைப் பாதிக்கும் பிரச்னைகளுக்கு ஒரு தீர்வை சிபார்சுசெய்ய வேண்டும்.


நாகம்ஸ் (சுன்னாகம்) தினசரி: 6-45, 10-00 விஜயகுமார் நடித்த
தாயில்லாக்குழந்தை

வெல்லி (சாவகச்சேரி) தினசரி: 6-30, 9-30 சிவாஜி - மஞ்சுளா
மனிதனும் தெய்வமாகலாம்

ராஜா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி.ஆர்., விஜயா, நாகேஷ் நடித்த
நல்லநேரம் (புதிய பிரதி)

3வது ஜனத்திரள் வாரம்
ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம்.ஜி.ஆர். - பத்மினி - வீரப்பா நடித்த
விக்கிரமாதித்தன் (புதிய பிரதி)

வெலிங்டன் (யாழ்: நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - விஜயா
கிரகப்பிரவேசம் (கலர்)

Regal (Jaffna) Daily 4-45, 7-00 and 9-30 p.m
Kirk Douglas Richard Harris
in
Heroes of Telemark
(Colour Scope—war film's)

3-வது வெற்றி வாரம்
ராணி (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
ஏ. ஈ. மனோகரன்-சந்திரகலா
வாடைக்காற்று

வின்ஸர் (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
ரவிச்சந்திரன், கே. ஆர். விஜயா, விஜயகுமார், நிர்மலா, அசோகன் நடித்த
ஜானகி சபதம்

மனோகரா (யாழ்ப்பாணம்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்.-வாணிஸ்ரீ நடித்த
ஊருக்கு உழைப்பவன்

சாந்தி (யாழ்; நகர்) போன்: 7648.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
சிவாஜி... சாவித்திரி... ஜெமினி மற்றும் பலர் நடித்த பக்திப் பரவசமூட்டும். A. P. நாகராஜனின் ஈஸ்ட்மன் கலர்
கந்தன்கருணை

புலோலி சினிமாஸ் (பருத்தித்துறை)
தினசரி 6-30, 9-45 சனி, ஞாயிறு 2-30,
சிவாஜி - விஜயா நடித்த
எதிரொலி

றியோசினிமா [யாழ்ப்பாணம்]
இன்று முதல் சிவாஜி-சாவித்திரி நடித்த
எல்லாம் உனக்காக

யாழ். லிடோ மற்றும் ஏழு திரைகளில் தினசரி 4 காட்சிகள்
ஃ சிவபாதவிருதயர் ஃ வேதநாயகம் ஃ சாம்பசிவம் ஃ கந்தசாமி
ஃ டீன்குமார் ஃ ஜவாஹர் ஃ அமரசிங்கம் ஃ ஹெலன் ஃ சந்திரகலா
மற்றும் பலர் நடித்த
தென்றலும் புயலும்

# "குடும்பக்கட்டுப்பாடு தமிழ் இனத்திற்கு அவசியமில்லை"

## எதிர்க்கட்சித் தலைவர் 'அமிர்' கருத்து

(சுழிபுரம்)

"குடும்பக்கட்டுப்பாடு என்று கூறிக்கொண்டு தமிழினத்தின் விருத்தியைக் கட்டுப்படுத்தக்கூடாது" என்று எதிர்க்கட்சித்தலைவர் திரு. ஏ. அமிர்தலிங்கம் பண்ணாகத்தில் நடைபெற்ற திருமண வைபவம் ஒன்றில் மணமக்களை வாழ்த்திப் பேசுகையில் கூறினார்.

திரு. சோம திருச்செல்வம் தலைமையில் நடைபெற்ற இவ்வைபவத்தில் அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:

"குடும்பநலத்திட்டம் தேவைதான். அது எங்கே? எப்பொழுது செயற்படவேண்டும் என்பதுதான் கேள்வி?

இன்று இலங்கையில் குடும்ப நலத்திட்டம் உண்மையாகச் செயல்படுவது மேல்மட்ட மக்கள் மத்தியிலேதான். ஏனைய ரக மக்களிடம் எவ்விதகட்டுப்பாடும் இல்லை. நிறையக்குழந்தைகளைப் பெறுகின்றார்கள். இலங்கையில் வாழும் சிறுபான்மை இனமான தமிழ் பேசும் மக்களாகிய நாம் முதல் எம்மினத்தின் வாழ்வுக்காக எம்மாலான உதவிகளைச்செய்ய வேண்டும். இந்த நாட்டில் நாம் சிறப்போடும் சீரோடும் வாழவேண்டும். குடும்பக்கட்டுப்பாடு என்று கூறிக்கொண்டு எம்மினத்தைக் கட்டுப்படுத்த வேண்டாம். புதுமணத்தம்பதிகள் ஒழுங்குடனும், கட்டுப்பாட்டுடனும் வாழ்ந்து சகல செல்வங்களைப்பெற்றுவாழ்ந்து நாடும் வாழ வழிகாட்டவேண்டும்

திருமணங்கள் சொர்க்கத்தில் நிச்சயிக்கப் படுகின்றன என்பது ஓர் ஆங்கிலப் பழமொழி. இது உண்மை வாழ்வில் ஒருதரம் மட்டுமே திருமணம் செய்து கொள்ளலாம். ஆதலால் புதுமணத்தம்பதிகள் ஒத்தகருத்தினராய், விட்டுக்கொடுத்து வாழும் பண்பு உடையவர்களாக வாழவேண்டும்" என்றார்.

திருமதி மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் பேசுகையில்; "எமது இனத்திற்கு நிறையச் செல்வங்களைப்பெற்றுத்தாருங்கள். இந்தநாட்டில் வருங்கால சமுதாயம் சுதந்திரமாக வாழ வேண்டும். நாம் அடிமையாக எவ்வளவு காலத்திற்குத்தான் வாழ்வது?" என்றார்.

பண்டிதர் அ ஆறுமுகம், பண்டிதர் ம இராசகுரு ஒதுவார் மு கிருஷ்ணபிள்ளை ஆகியோரும் வாழ்த்துரை நிகழ்த்தினர். (உ)

## தமிழுலகின்—

(2ம் பக்கத் தொடர்ச்சி)

என்னும் பட்டம் வழங்கிக் கௌரவித்தது.

தொல்காப்பியத்திற்கு அவர் எழுதிய உரையும், 'இரகுவம்சம்' என்னும் காவியத்துக்கு எழுதிய உரையும் அவரைச் சிறந்த உரை ஆசிரியராகவும் ஆக்கியது.

ஐயர் அவர்களது சஷ்டியாப்தபூர்த்தியன்று தமிழ் அறிஞர்கள் ஒன்று சேர்ந்து மிகப் பெரிய விழா எடுத்து அன்னாருக்குப் பொற்கிழி வழங்கிக் கௌரவித்தனர். அந்த விழாவில் தமிழக அறிஞரான டாக்டர் உ. வே. சாமிநாதையர், கலைமகள் ஆசிரியர் கி. வா. ஜகந்நாதன் போன்றோர் ஐயரவர்களை வாழ்த்தினார்கள். 1951 ல் சென்னைத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தினர் அன்னாருக்குப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தனர்.

கவிபாடும் திறன்கொண்ட ஐயரவர்கள் புன்னைநகர் ஐங்கரன்பேரிலும், வறுத்தலைவிளான் ஐங்கரன்பேரிலும் பல பதிகங்கள் பாடினார்கள். தமக்கு அளிக்கப்பட்ட பொற்கிழியைக்கொண்டு தமது குலதெய்வமாகிய புன்னாலைக்கட்டுவன் ஐங்கரனுக்குப் பொற்கிரீடம் செய்வித்து மகிழ்ந்தார்கள்.

தமது கடைசிக்காலத்தில் மருதடி விநாயகர் ஆலயத்தின் அருகே ஆச்சிரமம் அமைத்து வாழ்ந்துவந்த ஐயரவர்கள் தமது எண்பதாவது வயதில் இறைவனடி சேர்ந்தார். ஐயரவர்கள் தமிழுக்கு ஆற்றிய தொண்டு அளப்பரியது. அன்னாரது நூற்றாண்டு விழா நடக்கும் இவ்வேளையில் நாமும் அவர்களது தமிழ்த் தொண்டினை நினைத்துப் போற்றுவோமாக.

## சமூக, பொருளாதார அபிவிருத்திச்சங்கம் அங்குரார்ப்பணம்

[யாழ்ப்பாணம்]

வட்டுக்கோட்டைத் தொகுதி சமூக பொருளாதார அபிவிருத்திச் சங்கம் அண்மையில் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு. நா. திருநாவுக்கரசு அவர்களால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது.

வட்டுக்கோட்டைத் தொகுதியின் கிராமங்கள் தோறும் குடிசைக் கைத்தொழில் முதலியவற்றை தேசிய அரசுப் பேரவை உறுப்பினரின் அனுசரணையுடனும் உதவியுடனும் ஆரம்பிக்க முயற்சிப்பதென்றும் சுயத்தொழிலில் ஈடுபட விரும்புவோருக்கு குடாநாட்டுக்கு அப்பால் தகுந்த காணிகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்வதென்றும் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் வகையில் சமூக வாழ்க்கையில் சீர்திருத்தம் செய்ய முயற்சிப்பதென்றும் தீர்மானித்துள்ளது.

சங்க நிர்வாகிகள் விபரம் வருமாறு:

தலைவர் டாக்டர் க. செங்காதரன், உபதலைவர்கள் எம், எஸ். கந்தையா, எஸ்.சபாபதி பொதுச் செயலாளர் என். சிவஞானம், உதவிச் செயலாளர் இ. விஜயரத்தினம் பிரசாரச் செயலாளர் ஆர். எம் தியாகராஜா, பொருளாளர் அ. எதிர்வீரசிங்கம், உதவிப் பொருளாளர் க. அமிர்தசிங்கம்:

15 கிராம சேவகர்கள் பிரிவுக்கும் 15 அங்கத்தவர்கள் தெரிவு செய்யப்பட்டு நிர்வாக சபையில் சேர்த்துக் கொள்ளப்பட்டனர். (இ)

## அமிர் — வி.பி. பரஸ்பர புத்தாண்டு வாழ்த்து

(யாழ்ப்பாணம்)

செந்தமிழர் இயக்க அமைப்பாளர் திரு. வி. பொன்னம்பலம் புத்தாண்டு தினத்தன்று காலை எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தை மூளாயில் உள்ள அவரது இல்லத்தில் சென்று சந்தித்து வாழ்த்துத் தெரிவித்தார்.

திரு. வி. பி யை திரு. அமிர்தலிங்கம் வரவேற்று தமது புத்தாண்டு வாழ்த்தினையும் தெரிவித்தார்.

திரு. வி. பி. யுடன் இயக்க பிரமுகர்களான திருவாளர்கள் இ. லஷ்மிகாந்தன், சி. சிவகுமாரன் ஆகியோரும் சென்றிருந்தனர். (உ)

## காலபுத்தி—

2-ம் பக்கத் தொடர்ச்சி

விருச்சிகம்: விவசாயிகளுக்கு வீண் செலவு. பொருள்வரவில் மந்தநிலை, புதுத்தொழில் புரிவோர்க்கு தனக்குறைவு. வியாபாரிகளுக்கு வரவில் தாமதம், வாகனச்சொந்தக்காரர்களுக்கு நஷ்டம் இயக்குனர்களுக்கு சோதனைகாலம். அவதானம வேண்டும், அரசியல்வாதிகள் அரசாங்க ஊழியர்கள் கடமையில் நிதானம வேண்டும. கடற்றொழில் புரிவோர் வருவாய் குறையும. கன்னியர் வாழ்வில் களைகள் படியும. மாணவர்கள் நிதானம் தவறுவர். குடும்பஸ்தர்களுக்கு சோதனைகாலம.

தனு: பிதாவழிச் இறப்பு, பெரியோர் ஆதரவு, பொன் பொருள் வரவு. நீர்த்தொழில் விருத்தி, நினைத்தது கூடும், விவசாயிகளுக்கு விமோசனம் அரசியல்வாதிகளுக்கு அவதானகாலம் வணிகர்களுக்கு வருமானமுண்டு. வனிதையர் வாழ்வில் வழமான முன்னேற்றம், கல்வி கற்போருக்கு விருத்தியுண்டு. கலைஞர்கள் போற்றப்படுவர். தோட்டக்காரர்கள் நன்மையடைவர். குடும்ப வாழ்க்கையில் புத்திர சுகம் புதுத்தொழில் புரிவோர்க்கு புதுமையில் நாட்டம் புண்ணிய விருப்புண்டாம்.

மகரம்: சத்துருக்களால் சஞ்சலம்; உறவினர் மத்தியில் பொறுமையுடன் நடப்பின் நலம், தேக சுகக்குறைவு, சுகாதாரத்தைப்பேணின் நலம் தொழிலாளர் மத்தியில் பதட்டநிலை, விவசாயிகளுக்கு பருவநிலையில் கோளாறு. காலமறிந்து பயிர்செய்வது விரும்பத்தக்கது. குடும்பஸ்தர்களுக்கு புத்திர சுகக்குறைவும் பொன், பொருள் விசயத்தில் கவலையுண்டு. அரச ஊழியர்கள் இடமாற்றம் பெறுவர். காதலர் வாழ்வில் கசப்பான நிகழ்ச்சி தோன்றும். கைத்தொழில் புரிவோர்க்கு ஆயுத பயமுண்டு. மனப்பக்குவம் அவசியம்.

கும்பம்: குடுமபஸ்தர்களுக்கு புத்திரமகிழ்ச்சியும் பொன் பொருள் வரவும கன்னியர் வாழ்வில் களிப்பூட்டும் நிகழ்ச்சியும் இடம் பெறும் விவசாயிகள் வெற்றி பெறும் காலம கைத்தொழில் கடல் தொழில் புரிவோர்க்கு கணிசமான வரவுண்டு. வரும ஆவணி மாதம விரும்பிய பொருள் வருதலும உத்தியோகத்தில் உயர்வும அரசியல் வாதிகளுக்கு அதிக மதிப்பும் வணிகர்களுக்கு நல்வரவும் வாகனச் சொந்தக்காரர்களுக்கு தனவரவும கலைஞர்களுக்கு கௌரவமும் உண்டு உயர் கல்வி பயில்வோர் சித்தியடைவர் பிணி நீங்க இடமுண்டு.

மீனம்: குடும்ப வழியில் கவலை. இல்லற வாழ்வில் எதிர்பாராத சோகம் காதலர் வாழ்வில் திடீர் திருப்பம் ஏற்பட இடமுண்டு. விவசாயிகளுக்கு லாபக்குறைவு பூமியால் நஷ்டம வணிகர்களாயின் அதிக முதலீட்டை தவிர்க்கவும அரசாங்க கடமையில் இருப்பவர்கள் கண்ணியமாக நடப்பதுடன் நிதான புத்தியும வேண்டும் மேல் ஒப்பி ல் கூடாது. கைத்தொழில் கடல்தொழில் புரிவோர்க்கு இது ஒரு சோதனை காலம் கல்வி பயில்வோர் கவனம் செலுத்தினால் பலனுண்டு. முயற்சி அதிகமாயின் முன்னேற இடமுண்டு. (அ)

## ஜே. பி. யாக நியமனம்

(யாழ்ப்பாணம்)

திரு. காசிப்பிள்ளை கனேசன் யாழ் மாவட்ட சமாதான நீதவானாக நியமனம் பெற்றுள்ளார். இவர் யாழ். மாவட்ட நீதிபதி திரு. நவரத்தினம் முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்தார். பிரபல சமூகசேவையாளரான இவர் முன்னாள் யாழ். மாநகர முதல்வர் காசிப்பிள்ளையின் ஏக புதல்வருவார் இவரது சமூக சேவையின் சான்றாக அரியாலை காசிப்பிள்ளை அரங்கு. காசிப்பிள்ளை ஞாபகார்த்த மண்டபம் ஆகியன சாட்சியளிக்கின்றன.

புதிய அரசாங்கம் பதவியேற்றபின் யாழ். மாவட்டத்தில்சத்தியப்பிரமாணம்செய்துகொண்ட முதல் சமாதான நீதவான் இவராவர். இவர் யாழ். மத்திய கல்லூரி கொழும்பு, சென். தோமஸ் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர். (கி)

## கலைவிழா

(சரவணை)

நயினாதீவு மணிமல்லவ கலாமன்ற கலைவிழாவின் இரண்டாம்நாள் நிகழ்ச்சி இன்று மேகலை அரங்கில் நடைபெறுகிறது.

இவ்வரங்கில் இசை நிகழ்ச்சிகள், சொற்பொழிவுகள், கவியரங்கு என்பன நடைபெறும்.

# ஹோமியோபதி மருந்து இறக்குமதிக் கட்டுப்பாட்டை நீக்குக

## வடஇலங்கைச் சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

"ஹோமியோபதி மருந்து இறக்குமதிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டை நீக்குமாறும் இம்மருந்துகளை சகல ஹோமியோபதி வைத்தியர்களும் இறக்குமதிசெய்ய அனுமதி வழங்குமாறும் வர்த்தக அமைச்சரை வற்புறுத்துக.'

இவ்வாறு சுகாதார அமைச்சரைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற வடஇலங்கை ஹோமியோபதி சங்கத்தின் 19வது வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது.

பின்வரும் தீர்மானமும் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது:

"1970ம் ஆண்டின் 7ம் இலக்க ஹோமியோபதி சட்டத்தை அமுல்செய்வதில் சுகாதார அமைச்சர் மேற்கொண்டுள்ள நடவடிக்கையை பாராட்டும் அதேவேளையில், சிங்களம் தமிழ், ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் ஹோமியோபதி பயின்ற ஹோமியோபதி வைத்தியர்களுக்குக் கடமையாற்றவல்ல ஒரு ஹோமியோபதி கவுன்சிலை விரைவில் நியமித்து ஹோமியோபதி வைத்திய முறைக்குச் சட்ட அங்கீகாரம் வழங்குமாறு இச்சங்கம் கேட்டுக்கொள்கின்றது.'

அடுத்த ஆண்டிற்கு பின்வருமாறு நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது:-

தலைவர்: டாக்டர் அ. கிருஷ்ணசாமி, உபதலைவர்: டாக்டர் எம். தே துரைசிங்கம், செயலாளர்: திரு. ம. வேலுப்பிள்ளை, உபசெயலாளர்: டாக்டர் செல்வி வி. நிர்மலாதேவி. பொருளாளர்: டாக்டர் எஸ். சிவநேசன். நிர்வாக உறுப்பினர்கள் டாக்டர் எஸ். குகநாதன், டாக்டர் எஸ். ஏகாம்பரம், டாக்டர் கே. லக்ஷ்மணன், டாக்டர் திருமதி கே. தவமணி, டாக்டர் பி. இராமச்சந்திரன், டாக்டர் செல்வி ஜி. ஞானேஸ்வரி, டாக்டர் வீ. தில்லைச்சந்திரன், டாக்டர் எஸ் ஏ எமிலியானுஸ், டாக்டர் எஸ். கந்தசாமி ஆச்சாரியார். (இ)

## புதிய உள்ளூராட்சி மன்றங்கள் 79 ஜனவரி முதல் இயங்கும்

(வெள்ளவத்தை)

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் இவ்வாண்டுக்குள் நடைபெற்றேதீரும். ஐம்பது உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்கள் செப்டம்பர்மாதம் வரை நடைபெறும். 1979-ம் ஆண்டு ஜனவரி முதல் உள்ளூராட்சி மன்றங்கள் செயல்படும்.

தேசிய அரச பேரவை சபாநாயகர் திரு ஆனந்த திஸ்ஸ டி. அல்விஸ் தலைமையில் நடைபெற்ற கட்சித்தலைவர்கள் மாநாட்டில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்பற்றி முடிவு எடுக்கப்பட்டது

மேற்படி கூட்டத்தில் பிரதம மந்திரி திரு. ஆர் பிரேமதாஸ, எதிர்க்கட்சித் தலைவர் திரு அ. அமிர்தலிங்கம், ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா, உப சபாநாயகர் ஜனாப் பாக்கிர் மாக்கார், விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. வின்சன்ட் பெரேரா, திரு. எம். சிவசிதம்பரம், திரு. எஸ். தொண்டமான், திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா ஆகியோர் கலந்துகொண்டனர்.

கொழும்பு உள்ளூராட்சி மன்றத்தேர்தல் செப்டம்பரில் நடைபெறும் என தெரியவருகிறது. இதில் ஐக்கிய தேசிய கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, இடதுசாரி ஐக்கிய முன்னணி, இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் (அரசியல் பிரிவு) ஆகியன போட்டியிடுவதற்குரிய நடவடிக்கைகளில் மும்முரமாக ஈடுபடத்தொடங்கியுள்ளன. (இ)

## ஜப்பான் உதவியுடன் 'டியூப் பல்ப்' தொழிற்சாலை

[கொழும்பு]

ஜப்பானின் உதவியுடன் "டியூப் பல்ப்" தொழிற்சாலை ஒன்று இலங்கையில் அமைக்கப்படவுள்ளது.

கட்டிடப்பொருள் கூட்டுத்தாபனம் இதற்கான ஏற்பாடுகளைச் செய்துவருகிறது.

ஜப்பானிய ஹித்தாசி நிறுவனத்துடன் இத்தொழிற்சாலையை இங்கு அமைப்பது தொடர்பான பேச்சுவார்த்தைகளை கட்டிடப்பொருள் கூட்டுத்தாபனம் அண்மையில்மேற்கொண்டது. (இ)

# பொருளாதார சுதந்திரம் இன்றேல் அரசியல் சுதந்திரத்தில் பயனில்லை

## வட்டு எம். பி. கூறுகிறார்

[யாழ்ப்பாணம்]

கடந்த 30 ஆண்டுகளுக்கு முன் இந்த நாடு சுதந்திர மடைந்தபோதிலும் நாம் பொருளாதார சுதந்திரத்தை இன்னும் அடையவில்லை. பொருளாதார சுதந்திரமில்லாத அரசியல் சுதந்திரத்தில் ஏதுவித பயனுமில்லை. எனவே நாம் பொருளாதார சுதந்திரத்தை அடைவதற்கு நீண்ட போராட்டம் ஒன்றை நடத்த வேண்டும் மக்களை அந்த வழியில் நாம் அழைத்துச் செல்லவேண்டும்.

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதி தேசிய அரசுப் பேரவை உறுப்பினர் திரு தா. திருநாவுக்கரசு சங்கானை மக்கள் வங்கிக் கிளையில் நடைபெற்ற புத்தாண்டு கைவிசேஷ வைபவத்தில் பேசுகையில் கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகம் செய்யும் பணக்கார வர்க்கத்திற்கே வெளிநாட்டு மூலதன வங்கிகள் உதவி செய்துவந்த வேளையில் இந்த வங்கிகளால் உதாசீனம் செய்யப்பட்ட ஏழை மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காக 1961ம் ஆண்டு மக்கள் வங்கி தாபிக்கப்பட்டது

இப்போது மக்கள் வங்கி நாடு முழுவதிலும் உள்ள கைத்தொழிலாளர்கள், விவசாயிகள் கடற்றொழிலாளர்கள், சிவல் தொழிலாளர்கள் ஆகியோருக்கு சகல வழிகளிலும் உதவிசெய்துவருகிறது

வட்டுக்கோட்டைத் தொகுதியில் அமைந்துள்ள இந்த மக்கள் வங்கிக்கிளை இத்தொகுதியுடன் மானிப்பாய், காங்கேசன்துறை தொகுதிகளின் ஒரு பகுதியினருக்கும் சேவையாற்றி வருகிறது. இக்கிளை முகாமையாளர் திரு. பி. கதிர்வேலாயுதபிள்ளையும் மற்றும் ஊழியர்களும் இப்பகுதியின் அபிவிருத்தியில் அதிக அக்கறை கொண்டுள்ளனர் என்பதை நான் அவதானித்துள்ளேன்

மின்தறி நெசவாலைகளையும் மற்றும் தொழிற்சாலைகளையும் கொண்ட சங்கானை மானிப்பாய், பண்டத்தரிப்பு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இந்த வங்கி உதவி வழங்கிவருகிறது. இந்த உதவிகளின் மூலம் இச்சங்கங்களில் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைத்துள்ளது.

இக்கிளை மூலம் இப்பகுதி மக்கள் சிறந்த வசதிகளைச் சிரமமின்றிப்பெற்று தமது வாழ்க்கைத்தரத்தை அபிவிருத்தி செய்துள்ளனர் என்பதை இங்கு கூறுவதில் மகிழ்ச்சி அடைகிறேன்,

மக்கள் வங்கி முகாமையாளர் திரு. பி. கதிர்வேலாயுதபிள்ளை இவ்வைபவத்தை ஆரம்பித்து வைத்துப் பேசுகையில் மக்கள் வங்கியின் நோக்கம், சேவை, கடன்வசதித்திட்டங்கள் பற்றி அங்கு கூடியிருந்த மக்களுக்கு எடுத்து விளக்கினார். (இ)

## சிரமதானம் மூலம் சித்தன் 'கேணி' புனரமைப்பு

[சங்கானை]

தானங்களில் சிறந்தது சிரமதானம். இந்தப் பணியைப் பொதுமக்கள் ஒன்றுபட்டு செய்வோமேயானால் தமது தொகுதி அபிவிருத்தி வேலைகளை இலகுவாக செய்து முடித்து அதன் பலாபலன்களையும் அனுபவிக்கலாம்''

இவ்வாறு வட்டுக்கோட்டைத் தொகுதித் தேசிய அரசுப்பேரவை உறுப்பினர் திரு தா. திருநாவுக்கரசு சித்தன்கேணி புனரமைப்பு சிரமதானப் பணியை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையில் கூறினார் ஆசிரியர் சிவரத்தினம் கந்தசாமி தலைமையில் நடைபெற்ற வைபவத்தில் திரு திருநாவுக்கரசு மேலும் பேசியதாவது;

சித்தர் என்பவரால் அமைக்கப்பட்ட இக் கேணி காலப்போக்கில் சித்தன்கேணியாக திரிபுபட்டு கிராமத்தின் பெயராக அமைந்துள்ளதென அறிகிறேன். ஆனாலும் எமது மூதாதையரால் அமைக்கப்பட்ட இக் கேணியை புனரமைத்து மீண்டும் இதன் பயனை இப்பகுதி மக்கள் பெறவைப்பது மகிழ்ச்சிக்குரியது இதுபோன்ற பணிகளை மாதாமாதம் இத் தொகுதியில் செய்வதால் தூர்ந்த குளங்கள் வடிவாய்க்கால்களை போன்றவற்றை செவ்வைப்படுத்துவதால் முக்கியமாக விவசாய உற்பத்தியை மேலும் பெருக்க முடியும். எனவே இப்பகுதியில் உள்ள சனசமூகநிலையங்கள், மன்றங்கள், கழகங்கள் மற்றும் பொதுஸ்தாபனங்கள் முக்கியமாக இளைஞர்கள் ஒன்றுபட்டு இயங்கமுன்வரல் வேண்டும் என்றார்.

வலிமேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. எம். சுப்பிரமணியம் பேசுகையில் தமது தேசியஅரசுப்பேரவை உறுப்பினர் மக்களுடன் நெருங்கிய தொடர்புடையவராதலால் மக்களுடைய ஒத்துழைப்பை நல்கி மேலும் இப்பகுதி அபிவிருத்தியை ஏற்படுத்த சகலரும் ஒன்றுபட்டு இயங்க வேண்டும் என்றார்.

ஆசிரியர் க. சி. குலரத்தினம் பேசுகையில் இன்றைய நிலையில் தமிழ்மக்கள் இவ்வித பணிகளில் முக்கியம் ஈடுபாடு கொள்ளவேண்டும் என்றார்.

நீண்டகால சர்வோதய இயக்க ஈடுபாடுடையவரான திரு. நாகபத்மநாதன் சிரமதானப் பணியின் மகத்துவத்தைப் பற்றியும் அதனால் மக்கள் அடையும் பயன்பற்றியும் விளக்கினார்.

மில்க்வைத் தொழில் அதிபர் திரு. கனகராசா கலந்து கொண்டதுடன் சிரமதானத்திற்கான உபகரணங்களையும் கொடுத்துதவினார்.

திரு. சிவரத்தினம் கந்தசாமி நன்றிகூறினார்.

லயன்ஸ்கழக வட்டுக்கோட்டைக் கிளையும் கலந்து கொண்டு தொண்டர்களுக்கு தேனீர் வழங்கியது.

### பதிவு செய்யக்...
(1ம் பக்கத் தொடர்ச்சி)

இன்றி இத்துணை வளர்ச்சியடைந்துள்ளது பாராட்டுக்குரியது சங்கத்தின் வளர்ச்சிக்கு என்னாலியன்ற உதவியைச் செய்யத்தயாராக இருக்கிறேன் என்றார்.

லிங்கிறேஸ் செல்வராஜா முதலானோரும் பேசினர்.

## ''பனை அபிவிருத்திச்சபையில் சிறுபான்மைத்தமிழருக்கும் இடம் வேண்டும்'

(யாழ்ப்பாணம்)

''தோட்டத்தொழில் அமைச்சின் பனை அபிவிருத்திச்சபையில் சிறுபான்மைத் தமிழ்ப் பிரதிநிதிகளுக்கும் இடமளிக்க வேண்டும்.'

இவ்வாறு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் ஒன்று அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் இயக்க ஆலோசனைக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது. திரு. எஸ். எஸ். சுந்தரத்தைத் தலைவராகக் கொண்ட இந்த இயக்கத்தின் முன்னைய பெயர் அகில இலங்கை முன்னேற்றத் தமிழர் அபிவிருத்தி இயக்கம்'' என்றிருந்தது.

மேற்படி ஆலோசனைக் கூட்டத்தில் அகில இலங்கை சிறுபான்மைத்தமிழர் இயக்கம் என்று பெயர் மாற்றம்செய்யப்பட்டது

இயக்கத்தின் 16வது ஆண்டு விழாவைக் கொண்டாடுவது பற்றி ஆலோசிக்கும்பொருட்டு இக் கூட்டம் உடுப்பிட்டியில் திரு வி. எஸ். நற்குணம் தலைமையில் நடைபெற்றது. தொழில் நியமனங்களைப் பொறுத்தவரை பெரர்களின் பொறுப்பில் விடப்படுவதால், பாரபட்சம் நிகழ்கின்றது என்றும் எனவே இதுவிடயத்தில் சிறுபான்மைத்தமிழ்ப் பிரதிநிதி ஒருவரை சிறுபான்மைத்தமிழர்க்கென நியமிக்கவேண்டும் என்று அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்வதென்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. [உ]

## யாழ். மாவட்ட சனசமூக நிலைய மாநாடு இன்று


(வண்ணார்பண்ணை)

உள்ளூராட்சி அமைச்சரும், பிரதமருமான திரு. ஆர். பிரேமதாசா நாடுபூராவும் உள்ள சனசமூக நிலையங்களை செயற்பாட்டுக்குக்கொண்டுவர நடவடிக்கை எடுத்துள்ளார்.

இச்செயற்பாட்டுத் திட்டத்தின்கீழ் மாகாணரீதியில் சனசமூகநிலையங்களின் பிரதிநிதிகள் கொண்ட மகாநாடுகளை நடத்த அமைச்சர் ஏற்பாடு செய்துள்ளார்.

இதுசம்பந்தமான யாழ். மாவட்ட மகாநாடு யாழ். மத்திய கல்லூரி மண்டபத்தில் நடைபெறுகிறது. யாழ் மாவட்ட சனசமூகநிலையங்களின் மேற்பார்வை உத்தியோகத்தர் திரு இ. கிருஷ்ணசாமி இதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்,

இம்மகாநாட்டில் பயிற்சி ஆணையாளர் திரு தேவரத்தினம் டான் பேத், உள்ளூராட்சி அமைச்சின் பிரதிநிதியாகக் கலந்துகொள்வார்.



யாழ்ப்பாணம் பிரிவின் மான்பேர் உத்தியோகத்தர்கள் இப்படத்தில் காணப்படுகின்றனர். இடமிருந்து வலமாக திரு. கோவிந்தபிள்ளை மகாதேவன்பிள்ளை (காங்கேசன்துறை பருத்தித்துறை ஆட்தெரிவுப் பிரதிநிதி) மான்பர் செயல்பணிப்பாளர் திரு. ஜோன்மூலர் ஊர்காவற்றுறை மற்றும் தீவுப்பகுதி மான்பேர் பிரதிநிதி திரு. செ. பவிதியஸ் பெர்னாண்டோ ராஜதுரை, யாழ்ப்பாண மான்பெர் மேற்பார்வையாளர் திரு. சபாபதி துரைராஜா, பின்வரிசையில் நிற்பவர்கள் திரு. துரைசிங்கம் செல்வராஜா, செல்வி நிர்மலாதேவி சண்முகநாதன், மான்பெர் யாழ்ப்பாணப்பகுதி காரியாலய உதவியாளர் திரு. மாணிக்கவாசகர் அழகரத்தினம், செல்வி சிவநேஸ்வரி முருகேசு படத்தில் காணப்படவில்லை.

### வேலைவாய்ப்பு:

## கூட்டணிக்கிளை வேண்டுகோள்

[யாழ்ப்பாணம்]

நல்லூர்த் தொகுதியில் ஜே/31 கிராமசேவையாளர் பிரிவில் அமைந்த வண்-வடமேற்கு த. வி. கூட்டணிக் கிளை, வேலைவாய்ப்பு வசதிகளை ஆராயுமுகமாக இப்பகுதியில் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்களைக் கோரியிருக்கிறது. பெயர், வயது, குடும்ப நிலை, தற்போதைய குடும்ப வருமானம், விரும்பும்தொழில்கள், கல்வித்தகைமை, குடும்ப உறுப்பினர் தொகை, தொழில் நுட்பத்தகைமை போன்றவிபரங்களை அனுப்புமாறு இக்கிளை வேண்டுகோள் விடுத்துள்ளது. [அ]

### எம். ஜி. ஆர்,...
(1ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றபோது மேற்படி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது

திரு. அமிர்தலிங்கத்தின் பிறந்த தினவிழாவின் பொருட்டு சிறப்புமலர் ஒன்று வெளியிடுவது என்றும் முடிவாகியது:

### தரமுயர்த்த கோரிக்கை

குப்பிழான் கிராமத்தில் உள்ள ஒரேயொரு பாடசாலையான விக்னேஸ்வரவித்தியாலயத்தை மகாவித்தியாலயமாக தரமுயர்த்தித்தருமாறு ஊரில் உள்ள சங்கங்களின் பிரதிநிதிகள் சகிதம் மானிப்பாய் எம். பி. திரு. வி. தர்மலிங்கம் தலைமையில் எதிர்கட்சித்தலைவர் திரு. அமிர்தலிங்கத்தையும் வடமாநில கல்விப் பணிப்பாளரையும் வலியுறுத்திக்கேட்டுக்கொள்வதெனவும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மாதாந்தக் கருத்தரங்கு நடத்துவது என்றும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (உ)

## முதலிடம்

[யாழ்ப்பாணம்]

உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலய பத்தாம்வகுப்பு மாணவி செல்வி நல்லையா இந்துமதி கடந்த டிசம்பர் மாதம் கொழும்பு விவேகானந்தசபை நடாத்திய சைவசமயபாடப் பரீட்சையில் முதலாம் இடத்தைப் பெற்றுள்ளார்.

ஈழத்தில் குறித்த மேற் வகுப்புப் பரீட்சைக்கு மட்டும் தோற்றிய 11549 மாணவர்களுக்குள் முதலாம் இடத்தை உரும்பராய் சைவத்தமிழ் வித்தியாலய மாணவி செல்வி ந. இந்துமதி பெற்ற காரணத்தினால் பல்கலைக்கழகப் புலமைப் பரிசிலையும் பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது

சைவத்தமிழ் வித்தியாலய அதிபர் திரு. வி. அரியநாயகம் தலைமையில் நடைபெற்ற பிரார்த்தனை விழாவில் செல்வி நல்லையா இந்துமதியின் கல்வி முயற்சியைப் பிரதி அதிபர் திரு. திரு அ பஞ்சாட்சரம் வெகுவாகப் பாராட்டிப் பேசினார் (அ)

### தோட்டத்—
(1ம் பக்கத் தொடர்ச்சி)

தோட்டத்தொழிலாளர் மற்றவர்களைப் போல் வாழ்பவர்களல்லர், தவிர்க்க முடியாத சூழ்நிலை காரணமாக லயன்களில் ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் சிறிய அளவிலான ஒரே வீட்டில் வாழ வேண்டியுள்ளது இந்நிலையில் இந்த வீட்டின் பிரதான குடியிருப்பாளரின் வருவாய் மட்டும் கணிக்கப்பட்டு பங்கீட்டரிசிப் புத்தகங்கள் வாபஸ் பெறப்பட்டுள்ளன.

இதன் காரணமாக வருமானம் குறைந்த இதர குடும்பத்தினரும் பங்கீட்டரிசியை இழக்க வேண்டியேற்பட்டுள்ளது இது ஒரு அசாதாரண சூழ்நிலையாகும். ஒன்றுக்கு மேற்பட்ட குடும்பங்கள் ஓரிடத்தில் வசிக்கும் போது அவர்கள் அனைவரினதும் பெயர்கள் ஒரே குடியிருப்பாளர் ஜாபிதாவில் இடம்பெற்று வருகின்றது. இந்த ஒரே காரணத்திற்காக சகலரும் பங்கீட்டரிசிப் புத்தகங்களை இழக்கவேண்டுமென்ற நியதி தவறானதாகும்.

இது மட்டுமல்ல மாதம் 21 நாள் வேலை என்ற முறையில் குடும்பத் தலைவனின் வருவாய் கணிக்கப்படுகிறது. இதுவும் தவறானதாகும், உண்மையில் சில தோட்டங்களில் 10 அல்லது 15 நாட்களுக்குமேல் தோட்டத்தில் வேலை வழங்கப்படுவதில்லை. இதனால் பங்கீட்டரிசியை இழந்து அதைவெளியில் வாங்க பணமில்லாத பரிதாபநிலைக்குதோட்டத்தொழிலாளர்கள் தள்ளப்பட்டுள்ளனர்.

எனவே, இவர்கள் விஷயத்தில் உடனடிக் கவனமெடுத்து நிவாரணமளிக்க வேண்டுகிறேன். மனிதாபிமானத்தின் அடிப்படையில் இப்பிரச்சினையை அணுகக்கோருகிறேன்.

இவ்வாறு அமைச்சருக்கு திரு செல்லச்சாமி எழுதியுள்ளார்,

### தமிழ்
(1ம் பக்கத் தொடர்ச்சி)

செயலாளர்கள் திரு. மாவை சேனாதிராசா, திரு செ. பெற்றுருக்கியேல். பொருளாளர் திரு. வே. யோகேஸ்வரன், இணைப் பொருளாளர் திரு. ஆ. ஆனந்தராசா. (செ-இ)

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 17-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu P, O. Box 49, Jaffna. Telegram 'Eelanaadu' Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka.